தில் பணிபுரியும் ஆயாக்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தில் மட்டும் வித்தியாசம் இருக்கிறது. எனவே, குழந்தைகள் காப்பகத்தில் இருக்கிற ஆயாக்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதற்கு, அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கும் குழந்தைகள் நல மையங்கள் எத்தனை என்பது பற்றியும் அந்த மையங்களை எப்படி தேர்வு செய்கிறோம் என்பது பற்றியும் கேட்கப்பட்டிருக்கிற கேள்வியாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரங்களை விளக்கமாகத் தரமுடியும்.

வேதாரண்யம் ஒன்றியம் வாய்மேடு கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம்

171—(*வினா எண். 17686)—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் வாமேடு கால்நடை மருந்தகம் ஒன்றியத்தின் கடைக்கோடியில் கட்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை திருத்தி எல்லோருக்கும் பயன்படும் வகையில் கிராமங்களின் மத்தியில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) : வேதாரண்யம் ஒன்றியம் வாய்மேடு என்ற இடத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்காக சர்வே எண். 369/3 என்ற இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த இடம் கிராமத்தின் மையத்தில் உள்ளது. அத்தோடு அந்த இடம் பக்கத்து கிராம மக்களுக்கும் உபயோகமாகவும், தண்ணீர் வசதி கொண்டதாகவும் காணப்படுகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்து கிராம மக்களுக்கும் பயன்படும் வகையில் இதனைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டிடத்தை விரைவில் கட்ட வேண்டும். ஆகவே இது சம்பந்தமாக அங்கே வழக்கு மன்றத்தில் இருக்கக்கூடிய வழக்கை துரிதமாக நடத்தி, விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 5

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திலிருந்து தீர்ப்பு வந்தபிறகு அந்தக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

பஞ்சாயத்துக்களில் செயல்பட்டுவரும் மகளிர் மன்றங்கள்.

172—(*வினா எண். 18150)—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்துக்களில் மகளிர் மன்றம் செயல்படுகின்றனவா?

(ஆ) அவைகளின் பணிகள் யாவை?

(இ) தமிழகத்தில் எத்தனை மகளிர் மன்றங்கள் உள்ளன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம். பஞ்சாயத்துக்களில் மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன.

(ஆ) 1. முதியோர் கல்வி கற்பித்தல்

2. தையல் வேலை கற்பித்தல்

3. இதர கைத்தொழில், அதாவது ஒயர் கூடை, பை, பர்ஸ் மற்றும் லேஸ் பின்னுதல் ஆகியவை கற்றுக்கொடுத்தல்.

4. குழந்தைக் கண்காட்சிகள் நடத்துதல்

5. பயிற்சி முகாம்கள் அமைத்து சத்துணவு பற்றி கிராம பெண்களுக்கு எடுத்துரைத்தல்.

6. மகளிர் மன்ற அங்கத்தினர்களை பொது அறிவு பெறும் பொருட்டு கல்விசுற்றுலா அழைத்துச் செல்லுதல்.

(இ) தமிழகத்தில் 11,183 மகளிர் மன்றங்கள் உள்ளன.

திரு. ரெ. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் மன்றங்களுக்கு தையல் மெஷின்கள் கொடுக்கப்பட்டு, செயல்படுவ தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பல்வேறு இடங்களில், மகளிர் மன்றங்கள் என்ற பெயராலே செயல்படும் இடத்தில், அந்த தையல் மெஷின்களை வாங்கி மூடி வைத்திருக்கக் கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மகளிர் மன்றங்களை பரிசீலனை செய்து அவைகளை முறையாக செயல் பாட்டிற்குக் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்று அறியவிரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS